# DEPOSITION OF WITNESS

(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | | |
|---|---|---|---|
| Case No | : STC.636/2025 | Date | : 08.08.2026 |
| Deposition of Witness for | : அ.சா.1 | Taluk | : |
| Name | : கிரண் | Calling | : |
| Father Name | : கோபால் | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 08.08.2026.

(எதிரி சுந்தரம் ஆஜர்).

(**அரசு தரப்பு முதல் விசாரணை :**

1) நான் தற்போது பெங்களூரில் வசித்து கார் ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். கடந்த 14-01-2024 ம் தேதி, மாலை சுமார் 06.30 மணியளவில் கோவையில் இருந்து கர்நாடகா செல்வதற்காக கோவை to சேலம் செல்லும் நெடுஞ்சாலையில் சங்ககிரி அருகே வந்துகொண்டிருந்தபோது, சேலம் to கோவை செல்லும் சாலையில் சென்றுகொண்டிருந்த Innova கார் ஒன்று திடீரென எந்தவித சைகையும் செய்யாமல் எனது காருக்கு குறுக்கே வந்து எனது காரின்மீது மோதிவிட்டது.

2) நான் சீட் பெல்ட் அணிந்திருந்ததால் எனக்கு காயம் எதுவும் ஏற்படவில்லை. எனது காருக்கு மட்டும் சேதாரம் ஏற்பட்டுவிட்டது. எனது காரின் மீது மோதிய Innova காரின் ஓட்டுநரை எனக்கு அடையாளம் தெரியவில்லை. இது சம்பந்தமாக சங்ககிரி காவல் நிலையத்தில் எழுத்துபூர்வமான புகார் ஒன்று கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். (**புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தனர்.

**குறுக்கு விசாரணை** :-

1) விபத்து நடந்து இரண்டு நாட்கள் கழித்து தான் சங்ககிரி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல, விபத்து நடந்த மறுநாள் கொடுத்தேன். நான் சென்ற கோவை to சேலம் செல்லும் நெடுஞ்சாலையின் அகலம் சுமார் 30 அடி இருக்கும் என்றால் சரிதான். விபத்து நடந்த இடத்தில் U-Turn செய்வதற்கு இடம் உள்ளது என்றால் சரிதான்.

2) நான் சென்ற கோவை to சேலம் செல்லும் நெடுஞ்சாலையின் இடதுபுறத்தில் சர்வீஸ் சாலை உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. என்மீது மோதிய Innova கார் U-Turn செய்ய அனுமதிக்கப்பட்ட பகுதியில் உரிய சமிக்கையுடன் U-Turn செய்து சர்வீஸ் சாலைக்கு அருகே சென்றுகொண்டிருந்தபோது, நான் தான் அதை கவனிக்காமல் வேகமாக வந்து அந்த காரின் இடதுபுற பகுதியில் மோதிவிட்டேன் என்றால் சரியல்ல.

3) விபத்தில் நான் ஓட்டி சென்ற காருக்கு முன்பகுதியில் தான் சேதாரம் என்றால் சரிதான். இழப்பீடு பெறுவதற்காக பொய் புகார் கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிமீது பொய் வழக்கு போடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

Sd/-S.Sathiya,
Judicial Magistrate No.1,
Sankari.

Sd/-Kiran

<u>DEPOSITION OF WITNESS</u>

(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | | |
|---|---|---|---|
| Case No | : STC.636/2025 | Date | : 08.08.2026 |
| Deposition of Witness for | : **அ.சா.2** | Taluk | : |
| Name | : **சக்திவேல்** | Calling | : |
| Father Name | : **மாணிக்கம்** | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 08.08.2026.

<u>(எதிரி சுந்தரம் ஆஜர்).</u>

<u>(**அரசு தரப்பு முதல் விசாரணை** :</u>

நான் தற்போது சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம், வேலம்மாவலசில் வசித்து பஞ்சர் கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். கடந்த 14-01-2024 ம் தேதி, நான் பஞ்சர் கடை வைத்திருக்கும் கடைக்கு எதிரே மாலை சுமார் 06.30 மணியளவில் விபத்து ஏறப்பட்டதாக கேள்விப்பட்டேன். நான் நேரில் பார்க்கவில்லை. இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தனர்.

**(சாட்சியை அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. சாட்சி பிறழ் சாட்சியாக அறிவிக்கப்பட்டது. சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பிற்கு அனுமதி வழங்கப்பட்டது).**

<u>**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை** :-</u>

கடந்த 14-01-2024 ம் தேதி, இரவு சுமார் 07.00 மணியளவில் கோவை to சேலம் செல்லும் தேசிய நெடுஞ்சாலையில் சங்ககிரி MRF யூ-டர்ன் அருகே

சென்றுகொண்டிருந்தபோது, எனக்கு முன்னால் சென்ற இன்னோவா கார் சென்றுகொண்டிருந்தது. அப்போது, சேலம் to கோவை நோக்கி வந்த இன்னோவா கார் ஒன்று அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், எந்தவித சைகையும் செய்யாமல் திடீரென யூ-டர்ன் எடுத்து கோவை to சேலம் செல்லும் தேசிய நெடுஞ்சாலையில் வந்த இன்னோவா காரின்மீது மோதி விபத்து ஏற்படுத்தியதை நேரில் பார்த்தேன் என்று போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது பிறழ் சாட்சியாக மாறி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :-**

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என தெரிவிக்கப்பட்டது.

Sd/-S.Sathiya,
Judicial Magistrate No.1,
Sankari.

Sd/-Sakthivel